மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால், பாரூர் ஏரியிலுள்ள உபரி நீரை பெனுகொண்டாபுரம் ஏரிக்கு கொண்டு செல்லும் திட்டத்திற்கு அரசு இந்த ஆண்டு மார்ச்சு மாதம் ஒப்புதல் அளித்துள்ளது.

நம்பி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம்.

†வினா எண் 98—திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி வட்டம் நம்பி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அந்த அணையின் மதிப்பீடு தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

திரு. மு.அப்பாதுரை : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அது எப்போது செயலுக்குவரும். அதன் மூலம் எவ்வளவு ஏக்கர் நிலம் நீர்ப்பாசனம் பெறும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ராஜாமுகமது : தலைவர் அவர்களே, முதலல் அதை ஒரு அணைக்கட்டுத் திட்டமாகத்தான் உருவாக்கலாம் என்று எண்ணம் இருந்தது. அதற்குப் பிறகு அதை ஒரு ரிசர்வாயர்—நீர்த்தேக்கத்திட்டம் என்ற முறையில் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வந்தது. அப்படி மாற்றுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வதற்காக நாம் தனியாக ஆய்வு வேலைகளை மேற்கொண்டோம். இப்போது சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது. ஆய்வுப் பணிகள் இன்னும் 6 மாதம் 1 வருடத்துல் முடியும் என்று கருதுகிறேன். அப்படி முடிந்தால் அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதைப் பற்றி அரசு முடிவு செய்யும். இந்தத் திட்டத்தின் மூலம் 390 ஏக்கர் நிலம் பாசன உறுதி பெறும். 120 ஏக்கர் நிலத்துற்குப் பாசனப் பற்றாக்குறையைப் போக்க முடியும். புதிதாக 1,020 ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் நிலை இருக்கும் என்று கருதப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டு விலைப்பட்டியல் படி இந்தத் திட்டத்தின் மதிப்பீடு தொகை 132 லட்சம் என்று இங்கே குறிப்பு சொல்லப்பட்டு இருக்கிறது.